# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை) ,
# தருமபுரி

சுற்றறிக்கை எண் : 37/2020

ந.க.எண் : 232/2015/COM(ATM) நாள் : 27.05.2020

## சுற்றறிக்கை

பொருள் : வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் Rupay Insta Debit Card / Insta KCC Card கிளை "Branch POS" Device மூலம் Card Activation /PIN Reset /Green PIN Generation மேற்கொள்வது - தொடர்பாக.

பார்வை : 1. மாநில கூட்டுறவு பதிவாளர் சுற்றறிக்கை Rc.No.29740/2016/CBP1 நாள் : 03.04.2020

2. TNSAC வங்கியின் D.O. letter D.O/MD.12877/ITD/2012-13 நாள் : 07.04.2020 மற்றும் 21.05.2020.

************

பார்வை 1-ல் காணும் மாநில கூட்டுறவு பதிவாளர் சுற்றறிக்கையின் படி, நமது வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் RUPAY Insta Debit Card / Insta KCC Card-க்கு Re-PIN வழங்குவது மற்றும் RUPAY Insta Debit Card / Insta KCC Card வழங்குவதில் நடைமுறையிலுள்ள காலதாமதத்தை களைய M/S.AGS Transact Technologies Ltd. மூலம் "Branch POS" என்ற மின்னனுச் சாதனத்தை பயன்படுத்துமாறு அறிவுறுத்தியதன் அடிப்படையில் "POS" மின்னனுச் சாதனம் 43 கிளைகளுக்கும் கொள்முதல்செய்யப்பட்டுள்ளது. கிளை மேலாளர்கள் "Branch POS" மின்னனுச் சாதனம் மூலம் வாடிக்கையாளர்களுக்கு கீழ்கண்ட சேவைகளை வழங்க தெரிவிக்கப்படுகிறது.

1/ Rupay Insta Debit / Insta KCC Card will be activated instantly anywhere by using Balance enquiry.

2. PIN and Re-PIN Generation instantly by Authentication Terminal.
(Authentication Password will be issued to each POS Device separately to Branch Manager)

கிளையில் வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு Activate ஆகாமல் உள்ள Rupay Debit/ KCC Card-கள் மற்றும் கிளையில் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள Rupay Debit/ KCC Card-ஐ இம்மின்னனுச் சாதனத்தை பயன்படுத்தி வாடிக்கையாளர்களை நேரில் அழைத்து PIN Generate செய்து கொள்ள வேண்டும். எக்காரனத்தைக் கொண்டும் வாடிக்கையாளரை அழைக்காமல் Card Activation செய்தல் கூடாது. ஏற்கனவே Rupay ATM Debit / KCC Card வழங்கிய வாடிக்கையாளர்களுக்கு புதிய Rupay Insta Debit / KCC Card வழங்கக்கூடாது.

புதியதாக Rupay Insta Debit /KCC Card வழங்கும் பொழுது வாடிக்கையாளர்களிடமிருந்து ATM Card விண்ணப்பம் பெற்று CBS-ல் ATM Card issue request menu-வில் ATM Card எண்னை பதிவு செய்துவிட்டு user codes menu-ல் ATM Facility 1 என மாற்றம் செய்தல் வேண்டும். பிறகு வாடிக்கையாளர்களுக்கு ATM Pin-ஐ Branch POS மூலம் Generate செய்ய வேண்டும். அடுத்த நாள் வாடிக்கையாளர்களுக்கு SMS வந்தவுடன் ATM Card ஐ பயன்படுத்துமாறு தெரிவிக்க வேண்டும்.

இதற்கென தனிப் பதிவேட்டில் வாடிக்கையாளர் விபரம், ATM Card எண் பதியப்பட்டு, வாடிக்கையாளரின் கையொப்பம் மற்றும் Activation செய்த பணியாளரின் கையொப்பம் பெறவேண்டும். Card Activation என்பது Balance enquiry ,Cash withdrawal, A/C. Transfer, Mini Statement, PIN Change போன்ற ஏதாவது ஒரு பதிவினை மேற்கொள்வதாகும்.

பார்வை 2-ல் காணும் TNSAC வங்கியின் கடிதத்தில் வாய்தா தேதிக்கு முன் செலுத்தும் அனைத்து KCC கடன்தாரர்களுக்கும் வட்டி மானியம் KCC கணக்கு மூலம் வழங்க இருப்பதால் பட்டியலில் கண்டுள்ள ஏற்கனவே வழங்கப்பட்டு activate ஆகாமல் உள்ள Rupay Kcc Card- கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்காமல் நிலுவையிலுள்ள Rupay KCC card கள் உடனடியாக வழங்கி அதனை activate செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் activate செய்த விவரத்தினை தினசரி Google form-ல் பதிவேற்றம் செய்து அறிக்கை அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கிளை மேலாளர்கள், கிளைப் பணியாளர்கள், கள மேலாளர்கள் மற்றும் சரக மேற்பார்வையாளர்கள் உதவியுடன் கிளைகளுக்கு அனைக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்களுக்கோ அல்லது கிளைகளுக்கோ வாடிக்கையாளர்களை வரவழைத்து Rupay Kcc Card -களை உடனடியாக Activate செய்து தினசரி அறிக்கையை 5 மணிக்குள் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது. மேலும் இப்பணியினை 30.06.2020 க்குள் விரைந்து முடிக்க கிளை மேலாளர்கள், பணியாளர்கள், கள மேலாளர்கள் மற்றும் சரக மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இப்பணிக்கு முக்கியதுவம் கொடுத்து உடனடியாக செய்து முடிக்க பணிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இச்சாதனத்தை தவறான நோக்கத்தில் பயன்படுத்தி வாடிக்கையாளருக்கும், வங்கிக்கும் ஏதேனும் நிதி இழப்பு ஏற்படும் பட்சத்திலும், சாதனத்தை தொலைத்துவிட்டாலோ அல்லது சேதம் ஏற்படுத்தினாலோ சம்மந்தப்பட்ட கிளை மேலாளர் மற்றும் பணியாளர்களே முழு பொறுப்பாவர். எனவே இச்சாதனத்தின் பயன்பாட்டினை கிளை மேலாளர்கள் மிகுந்த கவனத்துடன் கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்/- கி. ரேணுகா
இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர்

**இணைப்பு -**

Rupay ATM Debit, Kcc Card Activation Pending Details

பெறுநர் -

1. கிளை மேலாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்கள்.
2. கள மேலாளர்கள் மற்றும் அனைத்து சரக மேற்பார்வையாளர்கள்.

நகல் -

மேலாண்மை இயக்குநர், முதன்மை வருவாய் அலுவலர், பொது மேலாளர் மற்றும் உதவி பொது மேலாளர்கள் மேசைக்கு.

27/05/20

/ உண்மை நகல் / மேலாளர் (கணினி)